

தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் ஆகியோர் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி, ரிஷிவந்தியம் கிழக்கு ஒன்றியம் அத்தியந்தல் ஊராட்சி மன்றத் தலைவர் சாமிக்கண்ணு கஸ்தூரி, ரிஷிவந்தியம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் வடிவுக்கரசி சாமிசுப்ரமணியனின் புதுமனை புகுவிழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு புதிய இல்லத்தை திறந்து வைத்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர், இதில் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், உறவினர்கள், குடும்பத்தினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாமன்னர் திருமலை நாயக்கர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மதுரை மாமன்னர் திருமலை நாயக்கர் மகால் வளாகத்தில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி மேயர் திருமதி இந்திராணி பொன் வசந்த், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு. பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், பகுதிச் செயலாளர் சசிகுமார் ஆகியோர் உடன் உள்ளனர்.

## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

நாள் 10.2.2025



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

**1. நகைக் கடன் பிரிவில் வாராக்கடன் அதிகரிப்பதன் காரணம் என்ன?**

**கனிமொழி கருணாநிதி**



அண்மையில் ரிசர்வ் வங்கியின் வெளியிட்டுள்ள தரவுகளின்படி 2024-25ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தங்கக் நகைக் கடன் பிரிவில் வாராக் கடன் 30% அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளதை குறித்து கேட்டு திமுக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.

வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFC) வாரியாக கடந்த ஐந்து ஆண்டுகளில் தங்கக் கடன்களிலிருந்து எழும் செயல்படாத சொத்துக்களின் (NPAக்கள்) விவரங்கள், மார்ச் 2024இல் 1513 கோடி ரூபாயாக இருந்த வணிக வங்கிகளின் தங்கக் கடன் செயல்படாத சொத்துகள் ஜூன் 2024இல் 62% உயர்ந்து ரூ. 2445 கோடியாகியுள்ளதாக வெளியாகும் தகவல்களின் உண்மைத்தன்மை என்ன? நடப்பு நிதியாண்டில் வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்களின் ஒட்டு மொத்த கடன் இலாகாவில் தங்கக் கடன் செயல்படாத சொத்துகளின் சதவீதம் மற்றும் தங்கக் கடன் துறையில் செயல்படாத சொத்துக்களின் அபாயத்தைக் குறைக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள், தங்கக் கடன் வழங்கல்களில் சரியான மதிப்பீடு மற்றும் இடர் மதிப்பீட்டை உறுதி செய்யும் அதே வேளையில், சிறு கடன் வாங்குபவர்களுக்கான கடன் அணுகலை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்கிற விவரங்களையும் அதில் அவர் கோரியுள்ளார்.

**2. வரைவு யுஜிசி விதிமுறைகளின் 2025 ரத்து செய்க**

**டி.எம்.செல்வகணபதி**



பல்கலைக்கழக மானிய ஆணையத்தால் (யுஜிசி) வெளியிடப்பட்ட வரைவு விதிமுறைகள், 2025இன் முக்கிய அம்சங்கள் மற்றும் நோக்கங்கள் என்ன என்பதை விளக்குமாறு மக்களவையில் சேலம் எம்.பி. செல்வகணபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் வரைவு விதிமுறைகள், 2025 இல் உள்ள பல விதிகள் மாநில பல்கலைக்கழகங்களின் கல்வி சுதந்திரம், சுயாட்சி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு எதிராக உள்ளது. இந்த விதிமுறைகள் மாநில அரசுகளின் உரிமைகளை முழுமையாக மீறுவதாகவும், மாநில பல்கலைக்கழகங்களின் சுயாட்சிக்கு நீண்டகால பாதிப்புகளை ஏற்படுத்தும்.

பல மாநில சட்டமன்றங்கள் யுஜிசி வரைவு விதிமுறைகளுக்கு எதிராக ஒருமனதாக தீர்மானங்களை நிறைவேற்றியுள்ள நிலையில் இந்த புதிய வரைவு விதிமுறைகளை அரசாங்கம் திரும்பப் பெற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

**3. பெண்களுக்கு பணியிட பாதுகாப்பை உறுதி செய்க!**

**தர்மபுரி – அ.மணி**



அன்றாட கூலியாக பணிபுரியும் பெண்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டங்களை உருவாக்குமாறு தருமபுரி தொகுதி மக்களவை உறுப்பினர் அ. மணி நாடாளுமன்ற கேள்வி நேரத்தில் வலியுறுத்தியுள்ளார். அதில் அவர் அன்றாடம் கூலி பெறும் பெண்களுக்கு ஊதிய ஏற்றத் தாழ்வுகளை தடுக்கவும் பணியிடப் பாதுகாப்பை உறுதி செய்யவும் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

**4. தொழிலாளர் காப்பீட்டுக் கழகத்தின் திட்டங்களை மேம்படுத்துக**

**கள்ளக்குறிச்சி – மலையரசன்**



தொழிலாளர் காப்பீட்டுக் கழகத் (ESIC) திட்டத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு வழங்கும் சலுகைகள் பற்றிய விவரங்கள் கேட்டு கள்ளக்குறிச்சி தொகுதி திமுக எம்.பி மலையரசன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில், கள்ளக்குறிச்சி தொகுதி உட்பட நாடு முழுவதும் ESIC திட்டத்தின்கீழ் பயனடையும் பயனாளிகளின் எண்ணிக்கை குறித்த புள்ளி விவரங்களை கேட்டுள்ள அவர், அதிகரித்து வரும் பயனாளிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் ESIC வசதிகளை மேம்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

## அ.தி.மு.க. வாக்குகள் தி.மு.க.விற்கு மடைமாறத் தொடங்கிவிட்டன!

# பழனிச்சாமியின் கட்டுப்பாட்டில் அ.தி.மு.க. இல்லை!

## அண்ணா அறிவாலயத்தில் – சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

**சென்னை, பிப்.12-**

**அ.தி.மு.க. வாக்குகள் தி.மு.க.விற்கு மடைமாறத் தொடங்கி விட்டன என்றும், பழனிச்சாமியின் கட்டுப்பாட்டில் அ.தி.மு.க. இல்லை என்றும் சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து எஸ்.ரகுபதி செய்தியாளர்கள் சந்திப்பு குறித்து அறிக்கை வருமாறு :-

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி 1 லட்சத்து 15 ஆயிரத்து 709 ஓட்டுகள் பெற்று வெற்றி பெற்றுள்ளது. தி.மு.க.வின் நான்கு ஆண்டுக்கால ஆட்சியில் ஆட்சிக்கு எதிரான அலை இல்லை, ஆதரவு அலைதான் வீசுகிறது என்று இதன் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது.

2024 நாடாளுமன்ற தேர்தலில் அதிமுக 34 ஆயிரத்து 817 வாக்குகளை பெற்றது. அந்த வாக்குகள் அனைத்தும் தி.மு.க.வுக்கு கிடைத்திருக்கிறது. அ.தி.மு.க. தொண்டர்களும் இன்றைக்கு திராவிட இயக்கத்தை நிலைநிறுத்த கூடிய ஆட்சி தலைவர் தளபதினுடைய ஆட்சி என்பதை உணர்ந்து தி.மு.க.விற்கு வாக்களித்துள்ளனர். எப்போதும் வேறு யாருக்கும் ஓட்டு போடாத மாற்றுக் கட்சிக்காரர்கள் கூட திமுகவிற்கு வாக்களித்திருக்கிறார்கள். அந்த வாக்குகள் அனைத்தும் திமுக கூட்டணிக்கு கிடைத்திருக்கிறது.

**11 முறை தோல்வி அடைந்த எடப்பாடி பழனிச்சாமி!**

எடப்பாடி பழனிச்சாமி பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்ற பிறகு 11 முறை தோல்வி அடைந்திருக்கிறார். தொடர் தோல்வி அடைந்த ஒரு அரசியல் தலைவர் அவராகத்தான் இருக்க முடியும். இதிலிருந்து அ.தி.மு.க.வை வெற்றிப்பாதையில் அழைத்துச் செல்வதற்கு அவருக்கு எந்தவிதமான தகுதியும் இல்லை என்பது நிரூபணம் ஆகி உள்ளது. அங்கு இருக்கக்கூடிய தலைவர்கள் எல்லாமே வெறுப்போடு இருக்கிறார்கள்.

பழனிசாமி, பா.ஜ.க. கொண்டு வரும் திட்டங்களை மறைமுகமாக ஆதரிப்பார், வெளியில் பா.ஜ.க.வை எதிர்ப்பது போல நடிப்பார்.

ஈரோடு கிழக்கு தேர்தலில் பெற்ற வெற்றி முதல்வரின் திட்டங்களுக்கு கிடைத்த வெற்றியாகப் பார்க்கப்படுகிறது. எங்களின் திட்டங்களை பார்த்து தி.மு.க.வுக்கு வாக்களித்துள்ளார்கள் என்றால், மக்கள் திராவிட மாடல் ஆட்சியை வரவேற்கிறார்கள் என அர்த்தம்.

**தி.மு.க. அரசு நிறைவேற்றிய அத்திக்கடவு - அவினாசி திட்டம்!**

தி.மு.க. அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் அத்திக்கடவு - அவிநாசி திட்டம் முழுமையாக முற்றுப்பெற்றிருக்கிறது.

எடப்பாடி பழனிசாமிக்கு எந்தப் பயமும் கிடையாது என்பது தவறு, கட்சி அவரது கட்டுப்பாட்டில் இருக்கிறதா என்பதே அவரின் முன்னாள் அமைச்சர்களின் பேச்சுகள் எடுத்துக்காட்டாக உள்ளது. கட்டுப்பாட்டில் கட்சியை கொண்டு வருவதற்குப் படாத பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

சீமான் மீது அவதூறு வழக்குகள் பதிவு செய்து விட்டு நீதிமன்றத்திற்குச் சென்று அங்கே வழக்கு தொடர்ந்து கொள்ளலாம். கைது செய்ய வேண்டும் என்பது கட்டாயம் அல்ல, கைது செய்யலாம் செய்யாமலும் விட்டுவிடலாம். நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜராகி குற்றவாளி அல்ல, அவதூறாகப் பேசவில்லை என்பதை நிரூபித்தாக வேண்டும். அவர் அவதூறாகப் பேசினார் என்று வழக்கு பதிந்து இருக்கும் போது அவர் நீதிமன்றத்திற்கு வந்தாக வேண்டும். கைது செய்யவேண்டும் என்றால், எத்தனை முறை வேண்டுமானாலும் அவரைக் கைது செய்ய முடியும். எல்லா ஊர்களிலும் அவர் மீது புகார் கொடுக்கும் போது புகார்கள் மீது விசாரணை நடத்தி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து அதன் மீது வழக்கு நடத்தப்படும். நீதிமன்றம் அதை பார்த்துக் கொள்ளும்.

இந்து, முஸ்லீம் ஒன்றாக தான் தமிழகத்தில் உள்ளனர். புதிதாக மத கலவரத்தை உருவாக்க யார் நினைத்தாலும் அதற்கு இடம் கொடுக்க மாட்டோம். நாங்கள் அனைவரையும் சமமாகப் பார்க்கிறோம். யாரும் யாரையும் ஏமாற்றி விட முடியாது. அந்த பிரச்சனையை எவ்வாறு சுமூகமாகத் தீர்க்க வேண்டும் என முதலமைச்சருக்கு தெரியும். முதலமைச்சர் அதனை சுமூகமாக தீர்ப்பார்.

**தி.மு.க ஆட்சியில் பெண்களுக்கு தைரியம்!**

பெண்களுக்கு எதிரான குற்றங்களில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது என அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரின் குற்றச்சாட்டு பொய்யானது; போலியானது. தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கு தைரியம் வந்துள்ளது, தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை நீதிமன்றத்திலோ,காவல்நிலையத்திலோ புகார் கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கக்கூடிய காலம் இதுதான் என்பதை உணர்ந்து பெண்கள் புகார் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். பொள்ளாச்சி சம்பவங்கள் 14 நாள் காத்திருந்து அப்போது கூட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை பெண்கள் அச்சப்பட்டார்கள்.

அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் வழக்கு பதிவு செய்ய மாட்டார்கள் என அச்சம் அடைந்து பெண்கள் வெளியே வந்து புகார் கொடுக்கத் தயங்கினார்கள். பெண்களுக்கு பலத்த பாதுகாப்பு இருக்கிறது பெண்ணுரிமை பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையில் பெண்களுக்கு பாதிப்பு ஏற்படும் போது உடனடியாக புகார் கொடுக்க அவர்களுக்கு தைரியத்தை கொடுத்து இருக்கிறது.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.




சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று (11.02.2025) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லங்களில் தங்கியுள்ள மாணவ, மாணவிகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்து, விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை இயக்குநர் ஜானி டாம் வர்கீஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், இல்லப் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




திருச்செந்தூரில் இருந்து கோயம்புத்தூருக்குச் செல்லும் இரண்டு புதிய பேருந்துகளை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். விழாவிற்கு உதவி ஆட்சியர் சுகுமாறன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில், திருச்செந்தூர் தாசில்தார் பாலசுந்தரம், தமிழக அரசு போக்குவரத்து கழக தூத்துக்குடி பொது மேலாளர் பாலசுப்பிரமணியன், திருச்செந்தூர் கிளை மேலாளர் ராஜசேகர், உதவி பொறியாளர்கள் சங்கரன், லேம்பர்ட், தி.மு.க. மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், திருச்செந்தூர் நகராட்சித் தலைவர் சிவ ஆனந்தி, துணைத்தலைவர் செங்குழி ஏ.பி.ரமேஷ், நகர தி.மு.க. செயலாளர் வாள்சுடலை, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வகுமார். முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பில்லா ஜெகன், ஆழ்வை யூனியன் முன்னாள் தலைவர் ஜனகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. முதல் கட்டமாக இராணிப்பேட்டை மற்றும் காஞ்சிபுரம் வடக்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 12.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | காஞ்சிபுரம் வடக்கு | கார்த்திக் பேலஸ் மண்டபம், குன்றத்தூர் – மாங்காடு சாலை, சிக்கராயபுரம். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 09-02-2025

